செ.வெ.எண்: 510 நாள்: 19.09.2024

**திருநெல்வேலி மாவட்டம்**

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் தற்காலிக பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது -**

**மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் கா.ப. கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்,**

குடும்பம், சமுதாயம் மற்றும் பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு உதவும் வகையில் திருநெல்வேலி மற்றும் வள்ளியூரில் ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre) இயங்கி வருகின்றது. சுழற்சி முறையில் வழக்கு பணியாளர்-1, பல்நோக்கு உதவியாளர்-1, பாதுகாவலர் (ம) ஓட்டுநர்-4 ஆகிய பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சுழற்சி முறையில் பணியாற்றுவதற்கு திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த ஆண், பெண், மற்றும் மூன்றாம் பாலினத்தினர் ஆகிய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்களை https://tirunelveli.nic.in/ என்ற திருநெல்வேலி மாவட்ட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட சமூக நல அலுவலகம், B4/107, சுப்பிரமணியபுரம் தெரு, வ.உ.சி மைதானம் எதிரில், திருவனந்தபுரம் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627002 என்ற முகவரிக்கு 30.09.2024ம் தேதிக்குள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.